www.tamilarangam.net

# அறிவோர் பக்கம்

ஆண்டு 08 இதழ் 02(மாசி)

## சொல்லும் செயலும்,

### ‘கனவினும் இன்னாது மன்னோவினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு’ *(குறள்819)*

அந்த ஊரில் இன்னாசிமுத்து உபதேசியார் என்றால் தெரியாதவர்களே இல்லை. அவருக்கு பைபிள் மனப்பாடம். அவ்வூரிலுள்ள பாதிரியார் அவரை அருகில் உள்ள ஊர்களுக்குச் சென்று பைபிளை உபதேசித்துவரப் பணித்திருந்தார். அவருடைய உணர்ச்சி கலந்த உபதேசத்தினால், கிறிஸ்தவ மதத்தைப்பற்றிப் பலரும் அறிந்ததோடு கிறிஸ்தவர்களாகவும் மாறினர்.

இந்தச்செயல் அவ்வூரிலுள்ள சிவ பக்தரான பரமசிவத்திற்கு சங்கடத்தை உண்டுபண்ணிவிட்டது. இன்னாசிமுத்துவின் பேச்சால் இந்துமதம் அழிந்துவிடும் என்று பயந்தேவிட்டார். இதற்கு என்ன செய்யலாம் என அவ்வூர் மக்களுடன் கலந்தாலோசித்தார் இறுதியாக பட்டணத்தில் இருக்கும் திருக்குறள் பேச்சாளரான பழனியப்ப முதலியை அழைத்து எல்லா ஊர்களுக்கும் திருக்குறள் பிரசங்கம் செய்விப்பதென முடிவெடுத்தனர். பழனியப்பமுதலியும் வந்து தனது பிரசங்கத்தை தொடங்கினார். இன்னாசிமுத்து பைபிளைப் பற்றியும் பழனியப்பர் திருக்குறள் பற்றியும் தகுந்த மேற்கோள்களுடன் பிரசங்கம் செய்தனர். மக்களும் அவர்களுடைய பேச்சினை மிக உன்னிப்பாகக் கேட்டு மனதில் பதிய வைத்தனர்.

காலப்போக்கில் இவர்களின் பிரச்சாரம் போட்டிப் பிரச்சாரமாக மாறிவிட்டது. இதனால் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவது இயல்பாகிவிட்டது. இதன் காரணமாக, பைபிள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரசங்கி இன்னாசிமுத்து திருக்குறளையும், திருக்குறள் பிரசங்கி பழனியப்பமுதலி யையும் ஆழ்ந்து படிக்கத்தொடங்கினார் கள். இதுகூட அவர்களின் பேச்சுக்கு பெரும் துணையாக இருந்தது. ஆனாலும் இருவரும் நேருக்குநேர் சந்திக்கவுமில்லை, வாதம் புரியவுமில்லை. ஆனாலும் இந்த ஆராய்ச்சி அவர்களின் பேச்சுக்கு பெருந்துணையாக இருந்து வந்தது.

ஒருவர் பேச்சை ஒருவர் கேட்டுப்பிறகு பேசத் தொடங்கியதால், அவர்களின் பேச்சு முறையிலே பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஊர் மக்கள் இருவரையும் நன்கு வரவேற்று வந்தார்கள். எந்த மதமானால் என்ன? கிராமத்தில் உண்மையும் ஒழுக்கமும், நீதியும் நேர்மையும் நிலைபெற்றால் போதும் என்பதே அவ்வூர் மக்களின் எண்ணமாக இருந்தது. இதனால் அவ் இருவரையும் மக்கள் அன்போடு வரவேற்றார்கள். அடுத்த ஊருக்குப் போகும்போது சோறு கட்டிக் கொடுத்து அனுப்புவதுகூட சில கிராமத்தினர் வழக்கமாகிவிட்டது.

நண்பகல் 12 மணி. உச்சி வெயிலில் நடந்துவந்த களைப்பு. இன்னாசிமுத்து உப தேசியார் அடுத்த ஊர் போய்ச்சேர இன்னும் 3 மைல் நடக்கவேண்டும். ஆனால் அவரால் நடக்கமுடியவில்லை. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தென்னை மரங்களைக் கண்டார். அங்கு கிணறு இருக்கும் என்ற நம்பிக் கையில் தள்ளாடி நடந்து சென்றார். அவரின் எண்ணம் வீண் போகவில்லை. கிணறு இருந் தது. அதன் அருகில் பழனியப்பமுதலி தனது சோற்றை அவிழ்த்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இதைக் கண்டதும் தனக்கு கட்டாயம் சோறு கிடைக்கும் என எண்ணி ஆறுதல் அடைந்தார். கட்டுச்சோறு கரைந்து கொண்டேயிருந்தது. பழனியப்பர் இவரை அழைக்காதது மட்டுமல்ல, பாராமற்கூட சாப்பிட்டுக்கொண்டிருந்தார். தான் வந்தது அவருக்குத் தெரியாதோ என்று நினைத்து ஒரு கனைப்பும் கனைத்துப் பார்த்தார். இன்னும் கொஞ்ச சோறே இருந்தது. அதாவது கிடைத்தால் களைப்பு நீங்குமே என்று எண்ணி, சோற்றுக்கு நேரே போய் உட்கார்ந்து பார்த்தார். இன்னும் இரண்டு உருண்டைகளே இருந்தது. இது கிடைத் தால்கூட ஊர் போய்ச் சேரலாமே என்று நினைத்தவருக்கு ஏமாற்றம்தான். இருந்தாலும் ஒரு திருக்குறளையாவது ஞாபகப்படுத்திப் பார்க்கலாம் என நினைத்து,

**'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று'**

என மெதுவாகக் கூறினார். 'கிடைத்தற்கரிய அமுதமாயினும் விருந்தினர் அருகிலிருந்தால் தனித்து உண்ணாதே' என்பதுதான் அந்த குறளின் கருத்து. இந்தக் குறளையும் கேட்ட படி கடைசி உருண்டையையும் வாயில் போட்டார் பழனியப்பர். சோறு இருந்த துணியை எடுத்தார். ஒரு அரைச் சோற்றை அதை ஒரு சிறிய இலையில் வைத்து இரு கைகளாலும் தாங்கிப்பிடித்து, எழுந்து நின்று, உடலை வளைத்து வணங்கி,

**'நினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக் கொள்வார் பயன் றெரிவார்'**

எனக் கூறி நீட்டினார்.

எதிர்பாராத இச்செயலைக் கண்ட இன்னாசிமுத்து வெட்கிப் போனார். தட்டுத் தடுமாறி கிணற்றில் இறங்கி நீரருந்திக் களைப்பை மாற்றிக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தார்.

இது நடந்து இரண்டு கிழமையின் பின் பழனியப்பர், அருகிலுள்ள ஒரு கிராமத் திற்குப் போகும்போது களைப்பு ஏற்பட்டது. தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்லும்போது வழியில் இன்னாசிமுத்து தன் உணவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். கதை எதற்கு? கடைசியில் தனக்கு கொஞ்சமாவது கிடைக் கும் என எண்ணி அருகில் அமர்ந்தார். சோறும் குறைந்துகொண்டேயிருந்தது. தனக்குச் சோறு கிடைக்காதோ என்றெண்ணி

**தன்னைப்போல் பிறரையும் நேசிப்பாயாக!**

என்ற இயேசுவின் வார்த்தையை நினைவூட் டினார். இன்னாசிமுத்து முழுச்சோற்றையும் வாயில் போட்டுக்கொண்டு

**பிறர் பொருளை இச்சியாதிருப்பாயாக!**

www.tamilarangam.net

என்று கூறிக்கொண்டு போய்விட்டார். தனது சொல்லுக்கும் செயலுக்கும் திருக்குறளில் ஆதாரம் தேடி வைத்திருப்பதாக பெருமைப் பட்ட பழனியப்பர், இன்னாசிமுத்துவும் அப்படி பைபிளில் தேடி வைத்திருக்கிறார் என்பதைக் கண்டதும் வெட்கிப்போனார்.

பரமசிவத்திற்கு இந்தக் கதை தெரிந்தது. இன்னாசிமுத்து தனக்கு உதவி செய்யாததை பரசிவத்திடம், பழனியப்பர் கூறிவிட்டார். பரமசிவமும் வருந்தி இதைப் பாதிரியாருக்குத் தெரிவித்துவிட்டார். பாதிரியாரும் பரமசிவத்திடம் வந்து நடந்ததை விசாரிக்கச் சொன்னார். உண்மைகள் தெரிந்த பின், **மக்களைச் சீர்திருத்தியது போதும். இனி நீங்கள் உங்களையே சீர் திருத்திக்கொள்ளுங்கள்** என்று அவர்களை அனுப்பிவிட்டார்கள். இதை வள்ளுவரும்

**கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

என்றார்.

படி!. நன்றாகப் படி!.பிழையில்லாமல் படி!. எது நல்லது என்று ஆராய்ந்து உணர். நல்ல முடிவுக்கு வா!. உடனே செய்!. பிறரையும் செய்யச்சொல்!. தீர ஆராய்ந்து சொல்!. செய்வதற்காகச் செய்ய வேண்டியதைச் சொல்!. செய்துகொண்டே சொல்!!!. சொல்வேறு செயல்வேறு பட்டவர்களுடைய கூட்டுறவிலிருந்து விலகு. உடனே விலகு. ஏனெனில் அதுவே வாழ்விற்கு நல்லது.

(நன்றி திரு பெ.விசுவநாதம்)

# ஆயுர் வேதம்

ஆயுர் வேதம் என்பது ஆயுள் வேதம் எனப்படும் வைத்திய சாஸ்திரம் ஆகும். ஆயுள் விருத்திக்கு வழி சொல்லும் சாஸ்திரம் இது. ஆயுர் வேதம், இருக்கு (ரிக்)வேதத்தைச் சேர்ந்தது. இருக்கு வேதத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது. இந்த வேதமானது நீண்ட ஆயுளோடும், சரீர சுகத்தோடும் இருக்கும் வழி முறைகளைச் சொல்வதாகும். இதனை பல ரிஷிகளும், சித்தர்களும் எழுதினார்கள். அதனால் சித்த ஆயுள் வேதம் என்றும் கூறுவர்.

ஆயுள் குறைவது அநேகமாக வியாதியினால்தான். ஆனபடியால் வியாதிகள் வராமல் தடுப்பதற்கும், வியாதிகள் வந்தால் குணப்படுத்துவதற்கும் ஏற்ற வழிகளைச் சொல்லுவது இந்த ஆயுர் வேதம். எவ்வளவுதான் வியாதி வந்தாலும் அதனைக் குணப்படுத்தி நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும் என்றே பலரும் விரும்புகின்றோம். மருந்தைச் சாப்பிட்டு மரணத்தைத் தள்ளிப் போடவே முயற்சிக்கிறோம். அதற்கான வழிமுறைகளை இந்த ஆயுர் வேதம் காட்டுகின்றது.

ஆயுர்வேத சாஸ்திரத்தில் நாஸ்திகனுக்கு வைத்தியம் செய்யாதே என்றும் கூறப்பட்டுள்ளது. கருணையில்லாமல் இப்படிச் சொல்லவில்லை. உண்மையில் இப்படிச் சொன்னதே கருணையினால்தான். வியாதியில்தான் கஷ்டம் தெரிகிறது. கஷ்டம் வரும்போதுதான் எப்படியாவது மீள வேண்டும் என்ற தவிப்பில், கடவுள் இருப்பது உண்மையானால் என்னை அவர் காப்பாற்றட்டும் என்று ஒரு நாஸ்திகனால் நினைக்கமுடிகிறது.

www.tamilarangam.net

ஆயுர்வேத வைத்தியத்தில் முக்கியமான மூலச்சரக்கு மூலிகைகள்தான். வேப்ப மரக் காற்று இரத்த சுத்தி உண்டாக்கும் எனவும் கர்ப்பக் கோளாறுகளைப் போக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. வேம்பு, துளசி, வில்வம் மூன்றையும் ஒரே அளவு சேர்த்து தினந்தோறும் ஒரு பிடி சாப்பிட்டால், எந்த வியாதியும் வரா என ஒரு நாட்டு வைத்தியர் கூறுகிறார். அதே போன்று பூசை நேரத்தில் சாம்பிராணி தூபம் போடுவது, கற்பூரம் கொழுத்துவது ஆகியவைகூட கிருமி நாசினியாக அநேக வியாதிகளைத் தடுக்கிறது என ஆயுர்வேதம் கூறுகிறது.

ஆயுர்வேத வைத்திய முறையில் கொடுக்கப்படும் மருந்துகளினால் எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்பட வாய்ப்பில்லை. காரணம் அனைத்தும் இயற்கை மூலிகைகளில் இருந்து பெறப்படுபவையே. நாளானாலும் மூலம் வரை சென்று நோயைக் குணப்படுத்துவது ஆயுர்வேதம்.

ஆயுர்வேதத்திற்கு மூலபுருஷர்களாக சரகர், ஸுச்ருதர் என இருவர் உள்ளனர். சரகரிஷி என்பவர் பதஞ்சலி முனிவர் எனக் கூறப்படுகிறது. இவர்கள் எழுதிய சம்ஹிதைகள்தான் ஆயுர்வேதத்திற்கு மூல கிரந்தங்களாக இருப்பவை. சரகர் கூறியவை அனைத்தும் மூலிகைகள் மூலம் குணப்படுத்தும் வழிகளே. மற்ற ரிஷியான ஸுச்ருதர் சத்திர சிகிச்சை பற்றிக் கூறியுள்ளார். ஆனாலும் அந்த ஏடுகள் அழிந்தபடியினால் அவை ஆயுர் வேத வைத்தியமுறையில் இல்லாது போய்விட்டது. ஆயுர் வேதத்தில் இருந்த சத்திர சிகிச்சை முறை இந்தியாவில் இருந்து அரேபியா வழியாக கிரேக்கத்திற்குப் போனதாயும் பின் அங்கிருந்து இத்தாலிக்குப் பரவி, பின்பு ஐரோப்பா முழுவதும் பிரகாசமானதாகவும் “என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா” எனும் நூல் கூறுகிறது. ஸுச்ருதம் என்ற சாஸ்திரத்தில் நவீன காலத்தில் எத்தனை விதமான ரணசிகிச்சை ஆயுதங்கள் உபயோகத்தில் இருக்கின்றனவோ அத்தனையைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

இருக்கு வேதத்தில், வீராங்கனையாக இருந்த ஒரு இராணிக்கு(கேலனின் மனைவி விச்பலா) யுத்தத்தில் கால்போய்விட, அதற்கு பதில் அச்விதி என்ற தேவ வைத்தியர்கள் இரும்புக்கால் வைத்ததாக வருகிறது. மகா பாரதத்தில் ச்யவனர், யயாதி என்பவர்களின் வயோதிகம் போய் இளமை அடைந்ததாக கூறப்பட்டுள்ளது. “வாளால் அறுத்துச் சுடினும்” என குலசேகர ஆழ்வார் பாடியுள்ளார். வாளால் அறுத்தல் என்பது சத்திர சிகிச்சையே. பிற்காலத்தில் ஆயுர்வேதத்தில் இருந்து இம்முறை அற்றுப்போய்விட்டது.

எத்தனை கொடிய வியாதியானாலும், ஆழமான ரணமானாலும் அதைக் குணப் படுத்த மூலிகையே போதுமானது என்றும் எந்த மலையில் எந்த இடத்தில் என்ன மூலிகை இருக்கிறது என்பதை ரிஷிகள் அறிந்து வைத்திருந்தனர். ஆஞ்சநேயர் சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டு வந்தபோது அந்த மூலிகையின் காற்றுப்பட்ட உடனேயே மயக்கமாக இருந்த படைகள் புதுப்பலத் தோடு எழுந்தார்கள் எனக் கதைகளில் படிக்கிறோம்.

ஆயுர் வேதத்தில் சத்திர சிகிச்சை, மருந்து சாப்பிடுதல் தவிர, ‘லேபம்’ என்ற மருந்து பூசும் முறை உண்டு. இந்த முறை இப்போ மலையாள வைத்திய முறையில் பின்பற்றப் படுகிறது. இதைவிட வாந்தி பண்ண வைத்து குணப்படுத்துவது ‘வமனம்’ என்பதாகும். பேதி வைத்துக் குணப்படுத்தும் முறை ‘விரேசனம்’ ஆகும். ‘ஸ்வேதனம்’ என்பது வியர்த்துக் கொட்டப்பண்ணி அதன் மூலம் துர்நீர் வெளியே போகச்செய்து குணப்படுத்துவது. ‘ஸ்நேஹனம்’ என்பது எண்ணெய் தேய்த்து மயிர்க்கால் வழியாக உள்ளே மருந்தைச் செலுத்தும் முறையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவும் மலையாள முறையில் இன்றும் பின்பற்றப்படுகிறது. 'நஸ்யம்' என்பது மூக்காலே தும்ம வைத்து தோஷத்தை வெளிவரச் செய்வதாகும். 'அனுவாஸனம்' 'நிருஹம்' என்ற இரண்டும் எனிமா முறைகள்.

குடல், மூளை, எலும்பு, தோல், நரம்பு, இரத்தஅழுத்தம், மனோவியாதி, சர்க்கரை வியாதி போன்றவற்றிற்கான சிகிச்சை முறையும் ஆயுர்வேதத்தில் உண்டு. ஆயுர்வேதத்தில் பத்தியமும் உண்டு. பத்யம் என்றால் ஒரு வழியில் போகப்பண்ணுவது. ஆரோக்கியப்பாதையில் செலுத்துவதற்காக ஏற்பட்டதே பத்தியம் ஆகும். மருந்து சாப்பிட்டால் மட்டும் போதாது. உடம்பு சரியாவதற்கு இன்ன ஆகாரங்களை நீக்கிவிட்டு, இன்ன அளவில் இன்ன ஆகாரம் சாப்பிடவேண்டுமென்பது முக்கியம். இதுதான் பத்தியமாயிருப்பது. இந்தப் பத்தியங்களில் ஒன்றாக பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உபவாசம் இருப்பது ஆகும். ஒருநாள் முழுக்கப் பட்டினியாயிருப்பது உடம்புக்கு நல்லது என வைத்திய சாஸ்திரம் கூறுகிறது. இதையே ஏகாதசி என்று விரதாநுஷ்டானமாகவும் பெற்றிருக்கிறோம்.

ஆயுர்வேதம் என்பது இயற்கையாக அமைந்திருப்பதாகும். ஒவ்வொரு தேசத்திற்கும் ஏற்ற மாதிரியே சீதோஷ்ணமும் உணவும் அமைந்திருக்கிறது. அந்தந்தத் தேசத்திற்குத் தேவையான மூலிகைகள் அந்தந்தத் தேசத்திலேயே உண்டு. எந்தத் தேசத்தில் ஒருவன் பிறந்தாலும் அவனுக்கு அங்கேயே உண்டான சரக்குகளால் ஏற்பட்டதுதான் மருந்து என சரகத்தில் சொல்லப்பட்டுள்ளது.

யஸ்மிந் தேசே ஹி யோ ஜாத:
தஸ்மை தஜ்ஜௌஷதம் ஹிதம்

மூன்று காரணங்களுக்காக நாம் இந்த ஆயுர்வேத வைத்திய முறையை ஆதரிக்கலாம். இதில் பக்கவிளைவு ரொம்பக்குறைவு. இரண்டாவது நமது தேச சீதோஸ்ணம், நம் தேகவாகு ஆகியவற்றிற்கென்றே ஏற்பட்டது ஆதலால் தேவையற்ற விளைவுகளை உண்டாக்காது. மூன்றாவது செலவு குறைச்சல். அத்தோடு வாய்க்கு ஆரோக்கியமாக இருக்கும். ஓமம், திப்பிலி போன்றவையே தனி ருசி. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

## பழமொழி விளக்கம்

### 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'

உலக மக்கள் அனைவரும் தமது அன்றாட உணவுத் தயாரிப்பின்போது தேவையான அளவு, போதுமான அளவு கறிஉப்பை(சோடியம் குளோரைட்) சேர்த்துக்கொள்கின்றனர். சமீப காலங்களில் மக்களின் பெரும் பாலோருக்கு ஏற்படும் நோய்களின் முக்கிய காரணியாக இந்த கறிஉப்பே இருக்கின்றது. அதுவும் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமது உணவுவகைகளில் வாய்க்கு சுவையூட்டும் இந்தக் கறியுப்பை உபயோகிக்கவேண்டாம் என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

நாற்பது வயதிற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் உண்ணும் உணவுவகைகளில், கறிஉப்பைச் சேர்க்காமல் இருப்பதால் அந்த உணவுகள் அனைத்தும் "உப்பில்லாப் பண்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குப்பையிலே" என்ற பழமொழியைப் பார்த்து குப்பையிலே கொட்டவேண்டும். உடலுக்கு உணவினால் ஏற்படும் நோயைப் பார்ப்பதா?. உணவைப் பார்ப்பதா?. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". உணவை மாற்றவேண்டும். உணவில் உப்பைச் சேர்க்கக்கூடாது. இதனால் எம் முன்னோர்களின் அனுபவ மொழிகள் பொய்யாகிவிடும் என்றும் எண்ணத்தோன்றும்.

விஞ்ஞானம் வளர்ச்சி பெற்ற இக்காலத்தில்தான் உணவுப் பொருட்களையும் இயற்கை நமக்குக் கொடுக்கும் மரக்கறி, பழவகைகள் போன்றவற்றைப் குறிப்பிட்ட சில காலங்களுக்குப் பாதுகாத்து வைத்து உண்ணக்கூடிய குளிர்சாதன வசதிகள் இருக்கின்றன. ஆனால் அந்நாளில் உலர் தானியவகைகளைத் தவிர ஏனைய மரக்கறி, பழவகைகள், கடல் உணவு, இறைச்சி போன்றவற்றை பாதுகாத்து வைக்க முடியாது என்பதனை எம் முன்னோர்கள் அறிந்து வைத்திருந்தனர். மரத்திலிருந்து பறிக்கப்பட்ட காய்கறி வகைகளோ, பழவகைகளோ அல்லது வேறெந்த உணவுகளோ குறிப்பிட்ட ஓரிரு நாட்களின் பின் பழுதடைந்துவிடும். அதற்கான காரணம், அந்த உணவுப் பொருட்களில் இயற்கையாக சேர்ந்துள்ள தாது உப்புக்களின் (விஞ்ஞானத்தில் கூறப்படும் சோடியம், பொட்டாசியம், கல்சியம்,இரும்பு, செம்பு, வெள்ளி, நாகம்........இன்னும் பல) தன்மையில் மாற்றம் ஏற்படுவதேயாகும். இதனால் அந்த உணவுப்பொருட்களில் நச்சுத் தன்மை ஏற்படும். மரங்களில் இருக்கும் போதும் இந்த மாற்றம் ஏற்படும். பழ வகைகளில் ஏற்படும் அழுகல் தன்மை இந்த தாது உப்புக்களின் மாற்றத்தால் ஏற்படுகின்றது. இந்த விஞ்ஞான உண்மையை உணர்ந்த முன்னோர்கள் தாது உப்புக்களைக் கருத்தில் கொண்டு (அதில் இயற்கையாக உள்ள தாது உப்புக்களை) **'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'** எனக் கூறிவைத்தனர். ஆனால் நாம் கறி உப்பைக் கருதி இப் பழமொழியை உப யோகிக்கிறோம். கறிஉப்பு இல்லாத உணவுகளை குப்பையில் கொட்டுவது எமது அறியாமையையே காட்டும். கறி உப்பைக் குறைத்துக் கொள்ளுவது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது.

## கண்மூடித்தனமான நம்பிக்கைகள்

ஆண்களுக்கு வலது கண் துடிப்பது நல்லது என்றும், இடது கண் துடித்தால் அதிஷ்டம் என்பதும், பெண்களுக்கு இடது கண் துடிப்பது நல்லது, வலது கண் துடிப்பது கூடாது என்றும் நாம் கூறினாலும், மருத்துவர்கள் அதனை முற்றாக மறுக்கிறார்கள். அதனை மூட நம்பிக்கையென்றே கூறுகிறார்கள். கண் இமை துடிப்பதற்குக் காரணம் விட்டமின் குறைபாடுகளும், கல்சியம் குறைபாடுமே என அவர்கள் கூறுகின்றனர்.

கண்கள் சிவந்து காணப்பட்டால் கண்ணிற்குள் தாய்ப்பாலை விடுபவர்களும் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ணில் ஏற்படுகின்ற சிவந்த தன்மைக்கும் தாய்ப்பாலுக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் வைத்திய நிபுனர்கள் கூறுகிறார்கள்.

அதுமட்டுமல்ல குழந்தைகளின் கண்ணுக்கு, நாள்தோறும் மை இட்டால் கண்கள் அழகாகவும், பெரிதாகவும் இருக்கும் என கருதினாலும் தொடர்ந்து கண்ணுக்கு மை இடுதல் கண்ணின் மேல் விஷத்தை இடுவது போன்றதே. இதனால் வளர்ச்சியின்மை, வலிப்பு, மன நிலை பாதிப்பு போன்ற பல சிக்கல்களை ஏற்படுத்திவிடும் என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

கண்தானம் என்பது சிறந்தது எனக் கூறப்பட்டபொழுதிலும் பார்வைபோன முழுக்கண்ணையும் எடுத்துவிட்டு. வேறு ஒருவரின் கண்ணை அப்படியே பொருத்துவது என பலர் கருதுகின்றனர். இது தவறான எண்ணமே. 'கார்னியா' வை மட்டும்தான் மாற்றுகிறார்கள். கைக்கடிகாரத்தின் மேலுள்ள கண்ணாடியை மாற்றுவதுபோன்றதுதான் இது.

மாறுகண் என்பது இரண்டு க்ண்களும் இணையான நேர்கோட்டில் இல்லாமல் இருப்பதேயாகும். பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் மாறுகண் தீமையின் அடையாளம். ஆனால் நாம் அதிஷ்டம் என்போம். மாறுகண் பார்வையுடையவர்களை, அதற்கான சிகிச்சையை சிறு வயதிலேயே மேற்கொண்டால் அதைக் குணப்படுத்தமுடியும்.

(நன்றி டாக்டர் திருமதி ரஜனிகாந்தா)

# குடமுழுக்கு

சில நாட்களுக்கு முன் தென்னிந்தியாவின் திருமுக்கூடலூர் என்ற ஊரில் உள்ள மணிமுத்தீசுவரர் கோயிலுக்குத் தமிழ்ப் பற்றும் இறைப்பற்றும் ஒருங்கே அமையப்பெற்ற தமிழ் அன்பர்கள் பெரிய எதிர்ப்புக்களுக்கிடையே தமிழ் மொழியில் குடமுழுக்கு நடாத்தியிருந்தார்கள். இந்தக் குடமுழுக்கை அர்ச்சகர் சங்கம் எதிர்த்திருக்கிறது. காஞ்சியிலுள்ள சங்கர மடத் தலைமையோ ஒருபடி மேலே போய், தமிழ் முறைப்படி நடந்த குடமுழுக்கைத் தவறு என்றும், ஆகம முறைப்படி சமஸ்கிருதத்தில் தான் நடாத்தியிருக்க வேண்டுமென்றும், தமிழில் செய்தமையினால் நாட்டிற்கே கேடு உண்டாகுமென்றும் கூறிக் கண்டித்துள்ளது.

குடமுழுக்கு என்றால் என்ன?. கும்பாபிஷேகம் என வடமொழியில் உள்ளதைத் தமிழில் அதற்கு நேரான சொல் இல்லாத காரணத்தினால் அதை மொழி பெயர்த்து குடமுழுக்கு என்கிறார்கள். குடங்களில் தூய நீர் என்று கருதப்படுகின்ற கங்கை, யமுனை போன்ற ஆறுகளில் நீரை மொண்டு கொண்டு வந்து கோயிலின் உச்சியில் உள்ள கலசங்களின்மேல் வேதவிற்பன்னர்களைக் கொண்டு வேத மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு சொரிவதாகும்.

பழந்தமிழர் வாழ்க்கையில் இந்தப் பழக்கவழக்கங்கள் இருந்தன என்பதற்கு இலக்கியச் சான்றுகள் இல்லை. ஆரியரின் வருகைக்குப் பின்னரே அவர்கள் தமிழ் மன்னர்களை அண்டித் தம் பிழைப்புக்காகத் தம் மொழியான சமஸ்கிருதத்தையும் அவர்களின் வேதங்கள், ஸ்மிருதிகள் என்பவைகளை மிக நயமாக எடுத்துச்சொல்லி மன்னர்களை நம்ப வைத்து தம்பக்கம் ஈர்த்துக் கொண்டனர். இவர்கள் மடையர்களாக

www.tamilarangam.net

இல்லாமல் மன்னர்களாக இருந்திருந்தால் ஆரியம் தமிழரிடையே காலூன்றியிருந்திருக் காதன்றோ?.

ஆரியப் பார்ப்பனர்கள் பின்பற்றி வந்த சனாதன தருமம் என்ற வருணாச்சிரம தருமத்தை, அதாவது பிராமணர். சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வகையாக மக்களைப் பிறப்பினாலேயே பிரித்துவைக்கும் கோட்பாடுகளை மெல்ல மெல்லப் புகுத்தி வந்துள்ளனர். இவ்வாறு வருண வேறுபாடு களைச் சொன்னவர்கள், மன்னர்களைச் சத்திரியர்கள் என உயர்வாகச் சொல்லிய தால், மன்னர்களும் இவர்களது உள் நோக்கை அறியாது வஞ்சகப் புகழ்ச்சிக்கு மயங்கி இவர்கள் சொல்லும் வருணாச்சிரம தருமக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட தோடு, தம் குடிமக்களையும் பின்பற்றுமாறும் செய்துவிட்டனர். இதன்படி பிராமணர் உயர் பிறப்பினர் என்றும் மற்ற மூன்று வருணத்தின ரும் தமக்கு உழைப்பதற்காகவே பிரம்மா வினால் படைக்கப்பட்டவர்கள் என்றும் பொய் கூறித் தமிழர்களை நம்ப வைத்தனர். வேதங்கள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டதாலும், அம் மொழி தேவமொழி எனச் சொல்லப்பட்ட தாலும் அம்மொழி அறியாத தமிழ் மன்னர் கள், அவற்றை உண்மையென்று நம்பிய தோடு தம் மக்களையும் நம்பும்படி செய்து விட்டனர். இந்த வருணாச்சிரம தருமம் தமிழ் மக்களிடையே வேரூன்றிவிட்டது. இதை அசைக்கமுடியாது. இதனால்தான் தமிழ் குடமுழுக்கை பார்ப்பனர்கள் அனைவரும் கண்டித்துள்ளனர்.

குடமுழுக்கு என்பதே தமிழர்களை இழிவு படுத்துவது தானே!. திருப்பணிகள் செய்யும்போது சூத்திர மக்கள் கோயிலின் மேலேறிப் பழுது பார்க்க நேரிடுகிறது. தமிழை நீசபாடை என்றும் தமிழர்களை இழி பிறவி என்றும் முன்பிருந்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதி சொன்னார். எனவே நீசர்கள் தொட்டதால் ஏற்பட்ட தீட்டை புனித நீர் கொண்டுவந்து, மந்திரங்கள் சொல்லி கலசங்களின் மேல் சொரிவதாகும். தீட்டுக் கழிப்பதற்கு பிராமணர்களுக்கே உரிமை உண்டு என வேதத்தைக் காட்டி வாதிடும்போது தமிழில் குடமுழுக்கு நடாத் தியோர் என்ன விடை பகர முடியும்?. குட முழுக்கு சரியெனில் வேதங்களையும் வருணாச்சிரம தருமத்தையும் ஏற்றுக் கொள்வதாக ஆகாதா?.

தமிழர்கள் கட்டிய கோயிலில் தமிழில் இறைவனை வழிபட வழியில்லை எனில், இதைவிட மானங்கெட்ட நிலமை வேறு இருக்கமுடியுமா?. பார்ப்பனர்களுக்கு மொழியும் இல்லை. நாடும் இல்லை. எங்கு வாழ்கிறார்களோ அங்கேயுள்ள மக்கள் பேசும் மொழிகளையே பேசுகிறார்கள். அவர்களுக்கென்று உள்ள ஒரே மொழி வழக்கற்றுப்போன சமஸ்கிருதமே. அம்மொழி பேச்சு வழக்கில் இருந்ததா என்பதே சந்தேகம். அப்படியே பேசப்பட்டிருந்தாலும் அது ஏன் தமிழைப்போல் இன்றும் மக்களால் பேசப்படும் மொழியாக இல்லை. பார்ப்பனர் தாம் உழைக்காமல் பிறர் உழைப்பால் வாழ்வதற்கே சமஸ்கிருதம் என்ற ஒரு மொழியைக் கற்பித்துக் கொண்டதுமன்றி அதில் வேதங்களையும் தம் நலனுக்கேற்ற வாறு எழுதிவைத்துக் கொண்டார்கள். வேதங்களைப் படிப்பதற்கும் அவற்றைப் பற்றி விளக்கங்கள் கூறுவதற்கும் அவர்க ளுக்கே முன்னுரிமை உண்டாம். இதை இறைநம்பிக்கையுள்ள தமிழ் அறிஞர்கள் ஏற்றுக் கொள்வார்களா?. அறிஞர்களே சிந்தியுங்கள்.

(நன்றி - கம்பன்)

[illegible]

உங்களிடம், பிறருக்குப் பயன்படும் விடயங்களிருப்பின் அவற்றை அறிவோர் பக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

தொடர்புகளுக்கு: N. Varatharajah, 132 Rue des fourches, 45500 GIEN. FRANCE.